# வள்ளலார் தின கருத்தரங்கு

**மதுரை, ஆக. 29–**

மதுரை தியாகராஜர் கல்லூரியில் வள்ளலாரின் 200ம் ஆண்டு தினத்தை முன்னிட்டு சாகித்ய அகாடமி, தமிழ்த் துறை சார்பில் கருத்தரங்கு துவங்கியது.

அகாடமிபொறுப்புஅலுவலர் சந்திர சேகரராஜூவரவேற்றார். கல்லூரி செயலாளர் ஹரிதியாகராஜன் தலைமை வகித்து, 'அன்பே சிவம் வள்ளலாரோடு பொருந்துவதை' கூறினார். அகாடமி தமிழ் ஆலோசனைக் குழுஒருங்கிணைப்பாளர் தாமோதரன் நோக்கம் குறித்து விளக்கினார்.டில்லி நேரு பல்கலை துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட் ஆய்வு நூலைவெளியிட்டார்.

அவர் பேசுகையில், ''மதுரையில்மீனாட்சியின் ஆட்சி நடப்பது பெண்ணியத்திற்கு உதாரணம். வள்ளலார் வழங்கிய போதனைகள் வாழ்க்கைக்கு வழிகாட்டுபவையாக இருக்கும்' என்றார். முதல்வர் பாண்டியராஜா நன்றி கூறினார். தமிழ்த் துறைத் தலைவர் மலர்விழி மங்கையர்க்கரசி உள்பட பலர் பங்கேற்றனர்.